சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு குடிமைப்பணி – துணை ஆட்சியர் நிலையில் மாறுதல் மற்றும் பணி நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–1 பிரிவு**

**அரசாணை (2டி) எண்.185**

**நாள் 16.12.2021**
**பிலவ வருடம், மார்கழி 1**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

படிக்கவும்

1. அரசாணை (2டி) எண்.115, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.08.2021.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.பணி–1(3)/து.ஆ.35–1/2021, நாள் 09.12.2021.

******

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விருதுநகர் மாவட்ட வருவாய் அலகினைசார்ந்த வட்டாட்சியர், திரு.சு.ரவிச்சந்திரன், என்பவரது பெயரை 2019–2020–ஆம் ஆண்டிற்கான தற்காலிக துணை ஆட்சியர் பட்டியலில் வரிசை எண்.125A–இல் திருமதி.வி.சாந்தி (வரிசை எண்.126) என்பவரது பெயருக்கு மேலேயும், திரு.எம்.கந்தசாமி (வரிசை எண்.125) என்பவரது பெயருக்கு கீழேயும் சேர்த்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. பார்வை 1–இல் கண்டுள்ள அரசாணையின்படி அதற்கிணங்க 2019–2020–ஆம் ஆண்டிற்கான பணி மாறுதல் மூலம் நியமனம் பெறும் துணை ஆட்சியருக்கான தற்காலிக பட்டியலில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள திரு.சு.ரவிச்சந்திரன், வட்டாட்சியரை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான பொது விதி 10(அ)(i)–இன் கீழ் துணை ஆட்சியராக கீழ்க்கண்டவாறு தனியரது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து இதன் மூலம் அரசு ஆணை வெளியிடுகிறது.

| வ. எண் | துணை ஆட்சியரது பெயர் மற்றும் தற்பொழுது வகிக்கும் பணியிடம் | பணிநியமனம் செய்யப்படும் பணியிடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | திரு.சு ரவிச்சந்திரன், வட்டாட்சியர் விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு (தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் விதி10(அ)(i)–ன் கீழ் துணை ஆட்சியராக தற்காலிகமாக பணியமர்த்தம்.) | நில அளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குநர் அவர்களது நேர்முக உதவியாளர் மற்றும் உதவி நிலவரித்திட்ட அலுவலர் (வடக்கு), சென்னை–5. | திருமதி. ச. ஆனந்தி (383), துணை ஆட்சியருக்குப் பதிலாக |

[த.பி.பா]

3. மேலே பத்தி 1–இல் குறிப்பிட்டுள்ள வட்டாட்சியர் துணை ஆட்சியர்களுக்கான தகுதிகள் அனைத்தையும் பெற்றுள்ளார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 1–இல் உள்ள வட்டாட்சியரின் பணி நியமனம் இடஒதுக்கீடு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து, அரசு செய்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது, இந்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி எடுக்கப்படும் நடவடிக்கைக்கு உட்பட்டதாகும். மேலும், மேற்படி வட்டாட்சியரை அவரது பணியிடத்திலிருந்து விடுவிக்கப்படும் முன்பாக தனியரின் மீது குற்றச்சாட்டுக்கள் அல்லது தண்டனைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர் தனியரை மாவட்ட வருவாய் அலகிலிருந்து விடுவிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுகொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜயந்த்
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
திரு.சு. ரவிச்சந்திரன், வட்டாட்சியர், விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு.
......முதன்மைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையர் மூலமாக
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர்.
இயக்குநர், நில அளவை மற்றும் நில வரித்திட்டம், சேப்பாக்கம், சென்னை–5.
**நகல்:–**
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) அவர்களின் சிறப்புநிலை நேர்முகஉதவியாளர், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலர் அவர்களின் தனிச்செயலாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

16/12/2021
பிரிவு அலுவலர்
16/12/21